StudentBounty.com

Register Number | | | | | | |

**Part III**

# வரலாறு / HISTORY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

குறிப்புரை: இவ்வினாத்தாள் அ, ஆ, இ, ஈ என்ற நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. வினாக்களுக்கு வரிசைக்கிரமமாக விடையளித்தல் வேண்டும்.
பகுதி - அ வில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் கட்டாயமாக விடையளித்தல் வேண்டும்.

## பகுதி - அ

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண். 45 × 1 = 45

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து உமது விடைத்தாளில் எழுதுக :

1. பிளாசிப்போர் நடைபெற்ற ஆண்டு

அ) 1757

ஆ) 1772

இ) 1764

ஈ) 1777.

2. காரன்வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்தியது

அ) மகல்வாரி முறை

ஆ) நிலையான நிலவரித் திட்டம்

இ) இரயத்துவாரி முறை

ஈ) ஜமீன்தாரி முறை.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

3. இந்தியாவில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக ஏற்கப்பட்ட ஆண்டு

அ) 1833

ஆ) 1835

இ) 1837

ஈ) 1839.

4. விதவைகள் மறுமண சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு

அ) 1846

ஆ) 1856

இ) 1870

ஈ) 1891.

5. பின்வருவனவற்றுள் வேலூர் கலகத்திற்கான காரணம் எது ?

அ) வாரிசு இழக்கும் கொள்கை

ஆ) கப்பம் வசூலித்தது

இ) புதிய ஆயுதங்களையும், சீருடைகளையும் அறிமுகப்படுத்தியது

ஈ) பிரிட்டிஷ் ஆட்சியின் பொருளாதார சுரண்டல்.

6. இந்தியாவின் முதல் வைஸ்ராய்

அ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

ஆ) டல்ஹவுசி பிரபு

இ) கானிங் பிரபு

ஈ) ரிப்பன் பிரபு.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

7. சத்திய ஞான சபை நிறுவப்பட்ட இடம்

அ) மதுரை

ஆ) இராமேஸ்வரம்

இ) வடலூர்

ஈ) சிதம்பரம்.

8. காந்தியின் அரசியல் குருவாக இருந்தவர் யார் ?

அ) சுரேந்திரநாத் பானர்ஜி

ஆ) கோபால கிருஷ்ண கோகலே

இ) பாலகங்காதர திலகர்

ஈ) பிபின் சந்திரபால்.

9. முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1906

ஆ) 1909

இ) 1916

ஈ) 1926.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



10. கேடா சத்தியாகிரகத்தை மகாத்மா காந்தி யாரை ஆதரிப்பதற்காக தொடங்கினார் ?

அ) அவுரிப் பண்ணையாளர்கள்

ஆ) ஆலைத் தொழிலாளர்கள்

இ) குடியானவர்கள்

ஈ) தொழிற்சாலை பணியாளர்கள்.

11. வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகத்திற்கு தலைமையேற்றவர்

அ) காந்திஜி

ஆ) ராஜாஜி

இ) வ.உ.சி

ஈ) காமராஜ்.

12. தென்னிந்திய நல உரிமைச்சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1912

ஆ) 1914

இ) 1916

ஈ) 1917.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



13. அரசியலமைப்புக் குழுவிற்கு தலைவராக இருந்தவர் யார் ?

அ) டாக்டர் அம்பேத்கார்

ஆ) டாக்டர் இராஜேந்திரபிரசாத்

இ) கே.எம். பணிக்கர்

ஈ) ஜவஹர்லால் நேரு.

14. முதலாவது இந்திய தொழில் நுட்ப நிறுவனம் (ஐ.ஐ.டி) துவங்கப்பட்ட இடம்

அ) கான்பூர்

ஆ) பம்பாய்

இ) சென்னை

ஈ) கோரக்பூர்.

15. சுதந்திர இந்தியாவில் காங்கிரஸ் அல்லாத முதல் அமைச்சரவைக்கு தலைமையேற்றவர்

அ) வி.பி. சிங்

ஆ) நரசிம்மராவ்

இ) மொரார்ஜி தேசாய்

ஈ) ஏ.பி. வாஜ்பாய்.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

16. இந்தியா முதல் அணு ஆயுத சோதனையை நிகழ்த்திய இடம்

அ) ஜெய்ப்பூர்

ஆ) கட்ச் பகுதி

இ) ஒரிஸ்ஸா

ஈ) பொக்ரான்.

17. இந்தியாவின் இரும்பு மனிதர் என அழைக்கப்படுபவர் யார் ?

அ) நேரு

ஆ) காந்தி

இ) வல்லபாய் படேல்

ஈ) லால் பகதூர் சாஸ்திரி.

18. பன்னாட்டுக் கழகம் உருவாகக் காரணமாக இருந்தவர்

அ) ஜார்ஜ் வாஷிங்டன்

ஆ) ஹாரி ட்ரூமன்

இ) எப்.டி. ரூஸ்வெல்ட்

ஈ) உட்ரோ வில்சன்.

19. தேசிய சோசலிஸ்டு கட்சியை நிறுவியவர்

அ) ஹிட்லர்

ஆ) முசோலினி

இ) கெய்சர் வில்லியம் II

ஈ) கார்ல் மார்க்ஸ்.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

20. கெடுபிடிப்போர் என்ற சொல்லை முதலில் பயன்படுத்தியவர்

அ) பெர்னார்ட் பரோச்

ஆ) எப்.டி. ரூஸ்வெல்ட்

இ) ஸ்டாலின்

ஈ) சர்ச்சில்.

II. பின்வரும் வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களை சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக :

21. திப்புவின் முதல் மகன் .................... ஆவார்.

22. மூன்றாம் பானிபட் போர் நடைபெற்ற ஆண்டு ...................... .

23. பாரக்பூரில் கொழுப்பு தடவிய துப்பாக்கி தோட்டாக்களை பயன்படுத்த மறுத்த சிப்பாய் ...................... .

24. இந்தியப் பல்கலைக் கழகங்கள் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ...................... .

25. சுவாமி தயானந்த சரஸ்வதி எழுதிய நூல் ...................... .

26. அன்னிபெசன்ட் அம்மையார் தன்னாட்சி இயக்கத்தை ...................... இடத்தில் தொடங்கினார்.

27. 'முழுச் சுதந்திரம்' பற்றிய தீர்மானம் இயற்றப்பட்ட இடம் ...................... .

28. தொலைநோக்கியைக் கண்டறிந்தவர் ...................... .

29. அமெரிக்க விடுதலைப்போர் ...................... உடன்படிக்கையின்படி முடிவுக்கு வந்தது.

30. அமெரிக்கா ஹிரோஷிமா மீது முதல் அணுகுண்டை வீசிய நாள் ...................... .

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

III. நிரல் 'அ' வின் கீழ் உள்ளவற்றை நிரல் 'ஆ' உடன் பொருத்துக.

| | 'அ' | | 'ஆ' |
|---|---|---|---|
| 31. | உள்ளாட்சி அமைப்புகள் | — | கர்சன் பிரபு |
| 32. | கல்விக் குழு | — | ரிப்பன் பிரபு |
| 33. | வங்கப் பிரிவினை | — | சர் வில்லியம் ஹண்டர் |
| 34. | பயங்கர ஆட்சி | — | மாண்டெஸ்கியூ |
| 35. | சட்டத்தின் சாரம் | — | ரோபெஸ்பியர். |

IV. 36. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) 1857 ஆம் ஆண்டு கலகத்தின்போது இரண்டாம் பகதூர் ஷா இந்தியாவின் பேரரசராக அறிவிக்கப்பட்டார்.

ஆ) பிரிட்டிஷ் தளபதி ஜான்சன் கான்பூரை மீண்டும் கைப்பற்றினார்.

இ) கிளர்ச்சியில் ஈடுபட்டதாக ராணி லட்சுமிபாய் தூக்கிலிடப்பட்டார்.

ஈ) அயோத்தி பேகம்களின் படைத்தலைவர்களில் தாந்தியா தோப்பும் ஒருவர்.

37. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) தீவிரவாதிகளின் தலைவராக கோகலே விளங்கினார்

ஆ) பிரிட்டிஷாரின் நீதியுணர்வில் தீவிரவாதிகள் நம்பிக்கை கொள்ளவில்லை

இ) தீவிரவாதிகள் அஹிம்சை கொள்கையில் நம்பிக்கை கொண்டிருந்தனர்

ஈ) அரசியலமைப்பு நெறிகளின்படி அவர்கள் சுயராஜ்யத்தை அடைய விரும்பினர்.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

38. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) சென்னை சுதேசி சங்கம் ஜி. சுப்பிரமணிய ஐயரால் தோற்றுவிக்கப்பட்டது.

ஆ) இந்திய தேசிய கங்கிரஸின் மூன்றாவது ஆண்டு பேரவைக்கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

இ) தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் பதவியில் பெரியார் ஈ.வெ.ரா எப்பொழுதும் இருந்ததில்லை.

ஈ) வேதாரண்ய உப்பு சத்தியாகிரக யாத்திரை ஜனவரி 1, 1930ஆம் ஆண்டு திருச்சியில் இருந்து துவங்கியது.

39. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) நீதிக் கட்சியின் முன்னோடி சென்னை ஐக்கிய கழகமாகும்

ஆ) நீதிக் கட்சி தாழ்த்தப்பட்டவர்களை புறக்கணித்தது

இ) நீதிக் கட்சியில் பிராமணர்களும் இடம் பெற்றிருந்தனர்

ஈ) பெண் கல்வியை நீதிக்கட்சி ஊக்குவிக்கவில்லை.

40. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) உலக அமைதியை காப்பதற்கு நிறுவப்பட்ட முதல் உலக நிறுவனம் ஐ.நா. சபையாகும்

ஆ) பன்னாட்டு தொழிலாளர் சங்கத்தின் தலைமை இடம் ரோம் நகரில் உள்ளது

இ) பன்னாட்டு நீதிமன்றத்தில் 15 நீதிபதிகள் உள்ளனர்

ஈ) உலக சுகாதார நிறுவனம் ஐ.நாவின் ஆறு முக்கிய உறுப்புகளில் ஒன்றாகும்.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



V. கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரி, எது தவறு என்பதனைக் குறிப்பிடுக.

41. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம் இந்திய பத்திரிகைகளின் சுதந்திரத்தை நசுக்கியது.

42. முதல் உலகப் போரில் துருக்கி தோற்றதே கிலாபத் இயக்கத்திற்கு முக்கிய காரணமாகும்

43. இலவச மற்றும் கட்டாயக் கல்வியை நீதிக் கட்சி அறிமுகம் செய்தது.

44. பி.வி. நரசிம்மராவ் ஆட்சியின்போது டாக்டர் மன் மோகன் சிங் நிதி அமைச்சராக இருந்தார்.

45. முதல் உலகப்போரின்போது இரண்டாம் வில்லியம் ஜெர்மனியின் அரசராக இருந்தார்.

## பகுதி - ஆ

VI. *குறிப்பு:* i) ஏதேனும் பதினைந்து வினாக்களுக்கு மட்டும் சிறுகுறிப்பு வரைக.

ii) அனைத்திற்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொன்றிற்கும் மூன்று குறிப்புகள் அளித்தல் வேண்டும். 15 × 3 = 45

46. ரோகில்லாப் போர்

47. ஸ்ரீரங்கப்பட்டிணம் உடன்படிக்கை

48. வாரிசு இழக்கும் கொள்கை

49. சதி

50. ராணி லட்சுமிபாய்

51. ஆர்ய சமாஜம்

52. சுயராஜ்ய கட்சி

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



53. பஞ்ச சீலம்

54. பாளையக்காரர் முறை

55. சுப்ரமணிய பாரதி

56. இந்திய தேசிய ராணுவம்

57. லக்னோ ஒப்பந்தம்

58. இரட்டையாட்சி (1919)

59. வுட் அறிக்கை

60. மாலுமி ஹென்றி

61. பாஸ்டன் தேநீர் விருந்து

62. ரூசோ

63. பேரரசுக் கொள்கை

64. பாதுகாப்பு அவை

65. நேட்டோ (NATO).

## பகுதி - இ

VII. *குறிப்பு :* i) பின்வருவனவற்றில் வினா எண் 77 உள்பட ஏதேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக. வினா எண் 77 -க்கு கட்டாயமாக விடையளித்தல் வேண்டும்.

ii) எல்லா வினாக்களுக்கும் சம மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

10 × 6 = 60

66. அ) டல்ஹவுசி பிரபுவின் சீர்திருத்தங்களை எழுதுக.

*அல்லது*

ஆ) துணைப்படைத் திட்டத்தின் முக்கிய கூறுகளை குறிப்பிடுக.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

67. அ) வேலூர் கலகத்திற்கான காரணங்களை விவரி.

அல்லது

ஆ) 1857 ஆம் ஆண்டு பெருங்கலகத்தின் விளைவுகளை ஆய்க.

68. அ) ரிப்பன் பிரபுவின் உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தை பற்றி விவாதிக்க.

அல்லது

ஆ) பிரம்ம சமாஜத்தின் சமூக சீர்திருத்தங்களை ஆய்க.

69. அ) இந்திய கைத்தொழில் அழிவதற்கான காரணங்களை ஆய்க.

அல்லது

ஆ) நேருவின் அறிக்கையைப் பற்றி விவரி.

70. அ) ஜாலியன் வாலாபாக் படுகொலையைப் பற்றி விவரி.

அல்லது

ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சியின் பங்கினைப் பற்றி விவாதிக்க.

71. அ) நீதிக்கட்சியின் கல்வி சீர்திருத்தங்களை விவரி.

அல்லது

ஆ) 1858 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின் சிறப்பியல்புகளை விவரி.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

72. அ) இந்திய அயலுறவுக் கொள்கையின் முக்கிய கூறுகளைக் குறிப்பிடுக.

*அல்லது*

ஆ) இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை பற்றி விவாதி.

73. அ) பன்னாட்டு கழகத்தின் முக்கிய உறுப்புகளை விவரி.

*அல்லது*

ஆ) கெடு பிடிப்போரின் தாக்கத்தை ஆய்க.

74. அ) மாசே துங் பற்றி குறிப்பு வரைக.

*அல்லது*

ஆ) இரண்டாம் உலகப் போரின் விளைவுகள் யாவை ?

75. அ) ரஷ்யப் புரட்சியில் லெனின் பங்கினைக் குறித்து விவாதி.

*அல்லது*

ஆ) இத்தாலியில் மறுமலர்ச்சி தோன்றியதற்கான காரணங்களைக் கூறுக.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

76. அ) அமெரிக்க விடுதலைப் போருக்கான அடிப்படைக் காரணங்களை ஆய்க.

*அல்லது*

ஆ) தொழிற்புரட்சிக்கான காரணங்களைக் கூறுக.

77. அ) உலக வர்த்தக மையம் பற்றி விவரி.

*அல்லது*

ஆ) உலகளாவிய பயங்கரவாதம் மற்றும் அதன் தாக்கத்தை மதிப்பிடுக.

பகுதி - ஈ

VIII. *குறிப்பு :* i) ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு ( வினா எண் 84 உள்பட ) விடை தருக. வினா எண். 84 -க்கு கட்டாயமாக விடை தருதல் வேண்டும்.

ii) அனைத்து வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்கள்.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

$5 \times 10 = 50$

78. அ) வாரன் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்களை தொகுத்துக் கூறுக.

*அல்லது*

ஆ) காரன்வாலிஸ் பிரபுவின் சீர்திருத்தங்களை மதிப்பிடுக.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

79. அ) பெண்டிங் பிரபு சமூக சீர்திருத்தங்கள் காலத்தை தொடங்கி கருத்துக் கூறுக.

*அல்லது*

ஆ) இந்தியாவில் தேசியம் தோன்றுவதற்கான காரணங்களை ஆய்க.

80. அ) இந்திய விடுதலை இயக்கத்தில் மகாத்மா காந்தியின் பங்கினை மதிப்பிடுக.

*அல்லது*

ஆ) 1857ம் ஆண்டு கலகத்துக்கான காரணங்களை ஆய்க.

81. அ) சுதந்திர இந்தியாவின் அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியை விவரி.

*அல்லது*

ஆ) இந்தியாவை ஒருங்கிணைத்ததில் சர்தார் வல்லபாய் படேலின் பங்கு ஆய்க.

82. அ) இரண்டாம் உலகப்போருக்கான காரணங்களை விவரி.

*அல்லது*

ஆ) 1789-ம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணங்களை ஆய்க.

83. அ) ஜெர்மனியில் நாசிச கருத்துக்களை விவரித்து அதன் வளர்ச்சியை ஆய்க.

*அல்லது*

ஆ) அமெரிக்க விடுதலைப் போருக்கு இட்டுச் சென்ற நிகழ்ச்சியை விவரி.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

84. அ) இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட ஐந்து இடங்களைக் காட்டுக :

i) சதாரா

ii) சென்னை

iii) அவுத்

iv) நாக்பூர்

v) ஜான்சி.

டல்ஹவுசியின் கீழ் ஆங்கிலேய இருப்பிடங்களை சுட்டிக் காட்டுக.

*அல்லது*

ஆ) 1885 முதல் 1935 வரை நடைபெற்ற விடுதலைப்போர் நிகழ்ச்சிகள் ஐந்தினை காலக்கோடு காட்டி வரைக.

*அல்லது*

இ) 1900 முதல் 1930 வரை நவீன உலக வரலாற்றில் நடைபெற்ற 5 முக்கிய நிழ்ச்சிகளை காலக்கோடு காட்டி வரைக.

---

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers